IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, NAMAKKAL
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

CC . No. 481/2020 Dep.of - PW. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துசாமி | Caste | : |
| Fathers Name | : | Calling | : |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act x of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------22

Chief Examination : Date : 17.11.2022

1) நான் தற்பொழுது வேட்டையகவுண்டன்புதூரில் குடியிருந்து கொண்டு டிரைவர் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் 1முதல் 3, 8-ம் எதிரிகளையும், இவ்வழக்கின் 4 முதல் 7 எதிரிகளையும் எனக்கு தெரியாது. 04.08.2018-ம் தேதியன்று நான் KA 01 C 7471 என்ற பதிவு எண் கொண்ட பத்து சக்கர டாரஸ் லாரியை வள்ளிபுர்த்தில் உள்ள நேசனல் அலைன்மெண்ட் சர்வீஸ் சென்டரில் மாலை சுமார் 04.30 மணிக்கு நிறுத்திவிட்டு சென்றேன். 09.08.2018-ம் தேதியன்று காலை சுமார் 09.00 மணிக்கு வந்து பார்த்தேன். எனது லாரியை நிறுத்தி இருந்த இடத்தில் காணவில்லை.

2) நானும், எனது நண்பர்களும் சேர்ந்து லாரியை தேடினோம். லாரியை கண்டுபிடிக்க முடியவில்லை. அதன்பின்னர் நல்லிபாளையம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரானது நான் கொடுத்ததுதான். அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் நான்கு மாதங்கள் கழித்து போலிசார் எனது லாரியை கண்டுபிடித்துவிட்டதாக கூறினார்கள். எனது லாரியை திருடிச்சென்ற நபர்கள் என்று சில நபர்களை போலிசார் போலிஸ் வாகனத்தில் அழைத்துச் சென்றபொழுது பார்த்தேன்.

3) அவர்களை எனக்கு தற்பொழுது நியாபகமில்லை. பின்னர் எனது லாரியை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். இன்று நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும்

புகைப்படத்தில் உள்ள லாரியைத்தான் நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுச்சென்றேன். (**அந்த லாரியை காண்பிக்கும் புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) நான் எனது லாரி காணாமல் போனதாக கூறப்படும் தேதியன்றே புகார் கொடுத்துவிட்டேனா என்றால் இல்லை. நான் லாரி காணாமல் போனதாக கூறப்படும் தேதியிலிருந்து நாட்பது நாட்கள் கழித்துதான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்துள்ள புகாரில் யாரோ உள்நோக்கத்துடன் எனது தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் எனது லாரியை எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்று கூறியுள்ளேன் என்றாலும், எனது லாரியை யாரோ திருடிச்சென்றுவிட்டார்கள் என்று புகாரில் கூறவில்லை என்றாலும் சரிதான்.

2) நான் புகாரில் குறிப்பிட்டுள்ள எனது லாரியின் அடையாளங்கள் எதுவும் அ.சா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள லாரியில் காணப்படவில்லை என்றால் சரிதான். எனது லாரியின் மதிப்பு மற்றும் அந்த லாரியானது பத்து சக்கர வாகனம் என்ற விவரத்தையும் புகாரில் நான் கூறவில்லை என்றால் சரிதான்.

(4 முதல் 8 எதிரிகள் 1 முதல் 3 எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்).

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, NAMAKKAL
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

CC . No. 481/2020 Dep.of - PW. 2

Name : மலர்கொடி Caste :

Fathers Name : Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act x of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------22

Chief Examination : Date : 17.11.2022

நான் தற்பொழுது வேட்டையகவுண்டன்புதூரில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 முத்துசாமி எனது கணவராவார். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. 04.08.2018-ம் தேதியன்று எனது கணவர் KA 01 C 7471 என்ற பதிவு எண் கொண்ட பத்து சக்கர டாரஸ் லாரியை வள்ளிபுர்த்தில் உள்ள நேசனல் அலைன்மெண்ட் சர்வீஸ் சென்டரில் மாலை சுமார் 04.30 மணிக்கு நிறுத்திவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டார். 09.08.2018-ம் தேதியன்று காலை சுமார் 09.00 மணிக்கு எனது கணவர் அங்கு சென்று பார்த்தபொழுது எங்கள் லாரியை நிறுத்தி இருந்த இடத்தில் காணவில்லை என்று வீட்டிற்கு வந்து என்னிடம் தகவல் கூறினார்.

2) நானும், எனது கணவரும், எனது கணவரின் நண்பர்களும் சேர்ந்து லாரியை தேடினோம். லாரியை கண்டுபிடிக்க முடியவில்லை. அதன்பின்னர் நல்லிபாளையம் காவல் நிலையம் சென்று எனது கணவர் புகார் கொடுத்தார். பின்னர் நான்கு மாதங்கள் கழித்து போலிசார் எங்கள் லாரியை கண்டுபிடித்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் எங்கள் லாரியை எனது கணவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) எங்கள் லாரி காணாமல் போனதாக கூறப்படும் தேதியன்றே எனது கணவர் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் லாரி காணாமல் போனதாக கூறப்படும் தேதியிலிருந்து நாற்பது நாட்கள் கழித்துதான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். எங்கள் லாரியை யார் திருடிச்சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

(4 முதல் 8 எதிரிகள் 1 முதல் 3 எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்).

**மறுவிசாரணை** – இல்லை.